# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 10.07.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சென்ற குத்பாவில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை தொடர்புபடுத்தி **ரஃபஅ** என்ற பொருளை விளக்கியிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில வசனங்களை விளக்கியிருந்தார்கள். **ராஃபிவுக இலைய்ய, பர் ரஃபஅ ஹுல்லாஹு இலைஹி** ஆகிய வசனங்களின் உண்மையான (பொருளை) விளக்கிக் கூறியிருந்தார்கள். அக்கருத்தை நான் இப்போது விளக்குவேன். இந்த **ரஃபஅ** என்ற சொல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தவிர வேறு எவருக்கேனும் இறைவன் கூறுகிறானா? இத்ரீஸ் நபி குறித்தும் இச்சொல் வருகிறது. அவரைப் பற்றியும் உடலோடு வானத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக கூற வாய்ப்பிருக்கிறது.

ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களைப் பற்றி திருக்குர்ஆனில் சூரா மர்யமில் 57, 58 வசனத்தில் இறைவன் கூறுகிறான். **வஸ்குரு ஃபில் கிதாபி இத்ரீஸ இன்னஹு கான ஸித்தீகன் நபிய்யா வ ரஃபஅனாஹு மகானன் அலிய்யா.** இந்த வேதத்தில் இத்ரீஸ் பற்றி சிறிது குறிப்பிடுவீராக. அவர் நிச்சயமாக உண்மையான நபியாக இருந்தார். அவரை நாம் ஒரு உயர்ந்த இடத்திற்கு உயர்த்தினோம்.

இப்போது பாருங்கள். இந்த வசனங்களில் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விட உயர்ந்த ஸ்தானம் வழங்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி **பர் ரஃபஅ ஹுல்லாஹு இலைஹி** என்று தான் வருகிறது. இறைவன் அவரை தம் பக்கம் உயர்த்தினான். ஆனால் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள் பற்றி வருகிறது. **வ ரஃபஅனாஹு மகானன் அலிய்யா.** நாம் அவரை உயர்ந்த இடத்திற்கு உயர்த்தினோம். எனவே முஸ்லிம்கள் திருக்குர்ஆனின் போதனையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் இறைவனிடமிருந்து அறிவிப்பைப் பெற்று இந்த உயர்த்துதல் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் வெட்ட வெளிச்சமாக விளக்கியுள்ளார்கள். எல்லா நபிமார்களின் உயர்த்துதலும் ஆன்மீக ரீதியாகவே நடக்கின்றது. அதேபோன்று தான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உயர்த்துதலும் நடந்தது. அதுவும் ஆன்மீக உயர்த்துதல்தான். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய ஆன்மீக உயர்த்துதல் பற்றி குறிப்பாக கூற வேண்டிய காரணம் யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது ஓர் அவதூறு கூறினர். அவர் சிலுவையில் அறைந்து சபிக்கப்பட்ட மரணம் அடைந்து விட்டார் என்றனர். நவூதுபில்லாஹ். இந்த அவதூறு குறித்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விடுவிப்பதற்காக திருக்குர்ஆன் கூறியது, அவர் சிலுவையில் மரணிக்கவில்லை. அல்லாஹ் அவரை சிலுவை மரணத்திலிருந்து காப்பாற்றினான். அவரை தன் பக்கம் உயர்த்தினான். கிறித்தவர்கள் தமது திரித்துவக் கொள்கையின் காரணத்தால் இந்த சிலுவை மரணம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு கிடைத்ததாகவும் அது மற்றவரின் பாவங்களுக்கு பரிகாரமாக அவருக்கு அவ்வாறு மரணத்தை ஏற்க நேர்ந்ததாகக் கூறினர். பிறகு அவர் உயிர் பெற்று வானத்திற்கு போய்விட்டதாகவும் ஒரு கற்பனையை எடுத்துரைத்தனர். அவர் வானத்தில் இறைவனுடன்போய் அமர்ந்து கொண்டு இறைமையின் பணி செய்வதாக கூறினர். கடைசி காலத்தில் உலகில், நீதியை நிலைநாட்ட வருவார். அப்போது எவர் மூன்று இறைவனை ஏற்கவில்லையோ அவர்கள் அனைவரும் பிடிக்கப்படுவர். எவ்வாறிருப்பினும், இக்கால கிறித்தவக் கொள்கையின்படி, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் இறைவனின் பணியாற்றிக் கொண்டு அமர்ந்துள்ளார். ஆனால் முஸ்லிம்கள்கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய **ரஃபஅ** – உயர்த்துதல் உடல்ரீதியான உயர்த்துதல் என்றும், இறுதிக்காலத்தில் இரத்த வெறியுடன் வரும் மஹ்தியுடன் சேர்ந்து கொண்டு உலகில் இஸ்லாத்தைப் பரப்ப முயல்வார் என்கின்றனர். சென்ற குத்பாவில் ஈரான் உடைய தலைவரின் ஒரு கருத்தை எடுத்து வைத்தேன். ஒரு உருதுப் பத்திரிகையில் அவர் தனது தவறான

கற்பனையை எழுதியுள்ளார். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தனது ஆரம்ப வாழ்க்கையில் இந்தப் போதனையைச் செய்யவில்லை. ஆங்கிலத்திலிருந்து உருது மொழியாக்கம் செய்யப்பட்ட அக்கட்டுரை இவ்வாறு தொடர்கிறது.

பிற்காலத்தில் மஹ்தியுடன் சேர்ந்து இஸ்லாத்தைப் போதிப்பார். முஸ்லிம்களில் பெரும்பாலார் இதே கருத்தைக் கொண்டுள்ளனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறுதிக் காலத்தில் வருவார். இரத்தம் சிந்தும் மஹ்தியுடன் சேர்ந்து கொண்டு உலகம் முழுவதும் முஸ்லிமாக்குவார். எவர் முஸ்லிமாக மாற மறுப்பாரோ அவரை கொன்று விடுவார். அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள். வரக்கூடிய அந்த இமாமை ஏற்றுக் கொண்டு இந்த அநீதியான இரத்தப் புரட்சியில் பங்குபெறுவதிலிருந்து தப்பியுள்ளோம்.

இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்து வைப்பேன். ஆனால் அதற்கு முன் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களைப் பற்றி பைபிளில் எழுதப்பட்டுள்ளவற்றைப் பார்க்கலாம். பைபிளில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு போய் விட்டதாக வருகிறது. ஆனால் இத்ரீஸ் (அலை) அவர்கள் பற்றி பைதாயிஸில் வருகிறது.

அவர் இறைவனோடு போய்க் கொண்டிருந்தார். அப்படியே மறைந்து விட்டார். ஏனெனில் இறைவன் அவரை தூக்கிக் கொண்டான். இது உருது மொழியாக்கப் பைபிளின் வாசகம். ஆங்கில மொழியாக்கப் பைபிளிலும் கிட்டத்தட்ட இதற்கு ஒப்பான வார்த்தைகளே உள்ளன. God took him என்று வருகிறது.

பைபிளில் மஸீஹ் வானத்திற்கு எடுத்துக் கொண்டது பற்றி வருகிறது. லூக்கா 24-வது அத்தியாயம் 51-வது வசனத்தில் வருகிறது. இத்ரீஸ் நபி (அலை) அவர்கள் பற்றியும் அவர் எடுத்துக் கொள்ளப்பட்டதாக வருகிறது. அவரை உயரத்திற்கு தூக்கிச் செல்வது கடவுள் ஆவதற்கு சமம் எனில் அத்தகுதியை ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களும் பெறுகிறார்கள். ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள் கடவுளாக முடியாது எனில், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இறைமையும் நிரூபணமாகாது.

எந்த அளவுக்கு எனில், திருக்குர்ஆனில் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள் பற்றி வருகிறது. உயர்த்தப்பட்டதாக வந்துள்ளது. இதிலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஓர் அசாதாரணமான மனிதரல்ல என்று தெரிகிறது. அசாதாரண ஸ்தானம் எதுவும் இல்லை. ஆனால் அதனை கிறித்தவர்கள் ஒப்புக் கொள்ளப்போவதில்லை. முஸ்லிம்கள் இந்த வசனத்திலிருந்து கண்டிப்பாக வழிகாட்டலைப் பெற வேண்டும். இறைவாக்குறுதி உண்மையானது. கியாமத் வரை உண்மையானதாகவே இருக்கும். திருக்குர்ஆனின் போதனை மாறாதது. இறைவனே அதனைப் பாதுகாத்து வருகிறான். எனவே இறைவன் வழிகாட்டுவதற்காக தனது தேர்ந்தெடுக்கப்பட்ட தூதரை அனுப்புகிறான் எனில், பிறகு முஸ்லிம்கள் எந்த பதிலும் சொல்லி தப்பிக்க வழியில்லை. அவர்கள் எந்த தவறான தஃப்ஸீரும் அதற்குமேல் செய்ய இயலாது.

இங்கு இதனைத் தொடர்ந்து இன்னொன்றும் கூறுவேன். யஹூதிகளின் நூல்களில் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள் பற்றி கணிசமான அளவுக்கு விபரம் உள்ளது. தெளிவாகவே உள்ளது. அவரை இறைவன் உலகின் சீர்திருத்தத்திற்காக அனுப்பினான். உலகம் பாவத்தால் மூழ்கியிருந்தது. இறைவன் அவரை வானத்தின் பக்கம் எடுத்துக் கொண்டான். எவ்வாறிருப்பினும் இது யூதர்களின் கொள்கையாகும். நமது கேள்வி என்னவென்றால், திருக்குர்ஆன் கூறுவதை நம்புகிறோம். அவருக்கு இறைவன் உயர்ந்த ஸ்தானம் வழங்கியுள்ளான். அல்லாஹ் ஒவ்வொரு நபியையும் உலகில் அனுப்பும்போது அவருக்கு இவ்வுலகிலும் உயர்ந்த அந்தஸ்து வழங்குகிறான். அது அவர்களின் ஆன்மீக உயர்வுக்கு ஓர் அடையாளமாக விளங்குகிறது. அதன் மூலம் அவர்கள் உலகை சீர்திருத்துகின்றனர். பிறகு மறு உலகிலும் நபிமார்களுக்கு உயரிய ஸ்தானம் கிடைக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் கூறுகிறான். **வ ரஃபஅனாஹு மகானன் அலிய்யா** - மேலும் அவரை (இத்ரீஸ்) மிக மேலான இடத்திற்கு உயர்த்தினோம். (மர்யம் : 58) இந்த வசனத்தின் பொருள் என்னவெனில், இறைவனின்

தூய மக்கள் மிக உயரிய ஸ்தானத்திற்கு உயர்த்தப்படுகின்றனர். அவர்களுக்கு பல படித்தரங்கள் உள்ளன. எனவே இறைவன் கூறுகிறான். நாம் இந்த நபிக்கு வஃபாத்தை தந்த பிறகு உயர்ந்த ஒரு ஸ்தானத்தை வழங்கினோம். நவாப் சித்தீக் ஹஸன் கான் சாஹிப் தனது தஃப்ஸீரில் எழுதுகிறார். இவ்விடத்தில் ரஃபஅ என்பதன் பொருள், ஆன்மீக உயர்த்துதல் ஆகும். இது மரணத்திற்குப் பிறகு நடக்கிறது. இல்லையெனில் ஒரு நபிக்கு பூமியில் வந்து மரணிக்க வேண்டிய வேளை கண்டிப்பாக ஏற்படும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இம்மக்களைக் குறித்து, அந்தோ பரிதாபம்! **இன்னீ முதவஃப்பீக்க வராஃபிவுக்க** - நான் உமக்கு நிச்சயம் மரணத்தைத் தருவேன்; பிறகு உம்மை உயர்த்துவேன் என்ற வசனத்தில் ஒரு விஷயத்தை மறந்து விடுகின்றனர். இவ்வசனத்தில் முதலில் **முதவஃப்பீக்க** வருகிறது. பிறகுதான் **ராஃபிவுக்க** வருகிறது. ஆகவே **ராஃபிவுக்க** என்ற சொல்லுக்கு மரணம் என்று பொருள் கொள்ள முடியும் என்றால், பிறகு **முதவஃப்பீக்க, ராஃபிவுக்க** என்ற சொற்களுக்கு ஏன் மரணம் என்ற பொருள் வராது?

**இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மிக நிச்சயமான விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் பூத உடலுடன் வானத்திற்கு செல்லவில்லை. மாறாக, மரணத்திற்குப் பிறகு வானத்திற்கு சென்றுள்ளார். மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஆதம் (அலை), ஹஸ்ரத் யஹ்யா (அலை), ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை), ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் யூசுஃப் (அலை) போன்ற நபிமார்கள் வானத்திற்கு உயர்த்தப்பட்டார்களா? இல்லையா? அவர்கள் அனைவரும் மிஃராஜில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எவ்வாறு காட்சி தந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவர்கள் அனைவரையும் மிஃராஜில் பார்த்தார்கள். எனவே அவர்கள் அனைவரும் உயர்த்தப்பட்டிருந்தார்கள் எனில், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு மட்டும் ஏன் ஒரு தனிப்பொருள் தரப்படுகின்றது? வியப்பு என்னவெனில், **தவஃப்பா** என்ற சொல் தெளிவாக மரணத்தைக் குறிக்கிறது. பிறகு வானத்திற்கு உயர்த்தப்படுவதன் பொருளும் தெளிவாகி விட்டது. அதாவது அவருக்கு முன்னால் உயர்த்தப்பட்ட இறந்தவர்களுடன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் சென்று சேர்ந்து விட்டார்கள். அந்த முன் சென்ற நபிமார்கள் எல்லாம் உயர்த்தப்படவில்லை என்று கூறுவீர்கள் எனில், வானத்திற்கு எப்படி சென்றனர்? உயர்த்தப்பட்டதால்தான் வானத்திற்கு சென்றனர். நீங்கள் திருக்குர்ஆனில் **வ ரஃபஅனாஹு மகானன் அலிய்யா** என்ற வசனத்தைப் படிக்கவில்லையா? அதே **ரஃபஅ** அல்லவா? அச்சொல்லுக்கு உயர்த்தப்படுதல் என்ற பொருள் இல்லையா? நீங்கள் எங்கு திருப்பப்படுகிறீர்கள்? அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் மூலம் திருக்குர்ஆனில் சான்றுகள் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதையெல்லாம் விளக்கினார்கள். ஒரு சாஹிப் தன்னை மார்க்க அறிஞர் என்று கூறிக்கொள்பவர் சொல்கிறார். முன்னரே அது குறித்து MTA –வில் கூறி விட்டேன். ரஃபஅ என்பது உடலளவில் நடக்கவில்லை. ஆன்மீகமாகத்தான் நடந்தது என்று ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. நமது அஹ்மதி இளைஞர்கள் அவரை Interview செய்யச் சென்றனர். பேச்சுக்கிடையில் அந்த ஆலிம் கூறினார். நான் உங்கள் உலமாக்களை விட அதிகம் படித்தவன். மிர்ஸா சாஹிபுடைய நூல்களையும் அதிகம் படித்துள்ளேன். இதிலிருந்து அவர் கூற வருவது நான் அஹ்மதிகளாகிய உங்கள் கூற்றை ஏற்க இயலாது.

ஹிதாயத்தை வழங்குவது இறைவனது பணியாகும். அபூஜஹில் போன்ற மக்கத்து தலைவர்களால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது முகத்தின் ஒளியைக் காண முடியவில்லை. அல்லது திருக்குர்ஆனின் போதனையை கவிதை என்று கூறி வந்தனர். இது அவர்களின் துர்பாக்கியமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆன் மீது இவர்களின் கருத்தினால் எந்த பங்கமும் ஏற்படுவதில்லை. எவர்களுக்கு அல்லாஹ் ஒளியும் தொலைநோக்குப் பார்வையும் வழங்கியுள்ளானோ அவர்கள் ஏற்றுக் கொண்டனர். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமையுடன் இவ்வாறு நடந்து கொள்ளப்படுகின்றது எனில், அதில் வியப்பு ஒன்றும் இல்லை.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் **ரஃபஅ** என்ற சொல் வருகின்ற ஒவ்வோர் இடத்திலும் அது ஆன்மீக உயர்வு என்பதே பொருளாகும். சில அறிவற்றவர்கள் கூறுகின்றனர். **வ ரஃபஅனாஹு மகானன் அலிய்யா** –வில் அது ஆன்மீக உயர்வு என்பதேயாகும். நவாப் சித்தீக் ஹஸன் சாஹிப் கான் சாஹிபும் **ரஃபஅனாஹு மகானன் அலிய்யா** என்பது ஆன்மீக உயர்வு என்றே குறிப்பிடுகிறார். முஸ்லிம்களின் அக்காலத்திலுள்ள சில உலமாக்களும் அவ்வாறே கூறினார். ஒரு ஆலிம் கூறுகிறார். **வ ரஃபஅனாஹு மகானன் அலிய்யா** –வில் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்கள் உடலுடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இது யஹூதிகளின் கொள்கையாகும். முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும். அவர்கள் இப்போது யாரைப் பின்பற்றுகிறார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய கதையைப் போன்று ஒரு கதையைப் புனைவதும் நமது குறைமதியடைந்த உலமாக்களின் தவறாகும். உண்மை என்னவெனில், இவ்விடத்திலும் **ரஃபஅ** என்பது ஆன்மீக உயர்வாகும்.

எல்லா மூஃமின்களும், நபிமார்களும் மரணித்த பிறகு இந்த ஆன்மீக உயர்வு ஏற்படுகிறது. காஃபிர்களுக்கு ஆன்மீக உயர்வு கிடைப்பதில்லை. இந்த வகையில் அல்லாஹ் கூறுகிறான். **லா துஃபத்தஹு லஹும் அப்வாபுஸ்ஸமாயி** – அவர்களுக்காக வானத்தின் வாசல்கள் திறக்கப்படாது (7:41). இவ்வசனம் இந்த ஆன்மீக உயர்வு கிடைக்காது என்றே சுட்டிக் காட்டுகின்றது. ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் பற்றி சூரா அஃராஃபின் 26வது வசனத்தில் வருகிறது. நீங்கள் பூமியிலேயே வாழ்வீர்கள். பூமியிலேயே மரணிப்பீர்கள். இந்நிலையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திலேயே வாழ்வது எப்படி சாத்தியமாகும். ஏனெனில் இந்த ஆயத்திலிருந்து இறை தீர்ப்பு வெளியாகி விட்டது. எந்தவொரு மனிதனும் வானத்தில் வாழ முடியாது. மாறாக எல்லா மக்களும் உயிர்வாழ்வதற்குரிய இடம் இப்பூமியேயாகும். இதுவன்றி இந்த வசனத்தின் மற்றொரு பகுதியாகிய **ஃபீஹா தமூத்தூன்** – நீங்கள் இப்பூமியிலேயே மரணிப்பீர்கள். இதில் தெளிவாக வந்து விட்டது. ஒவ்வொரு மனிதனின் மரணமும் பூமியிலேயே ஏற்படும். எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஏதாவது ஒரு காலத்தில் பூமிக்கு வந்தே ஆக வேண்டும் என்று ஒரு கொள்கையை வைக்க வேண்டிய கட்டாயம் நமது எதிரிகளுக்கு ஏற்பட்டது. இத்ரீஸ் மீண்டும் இறங்குவார் என்ற கொள்கையில்லை. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய கபர் பூமியில் இருப்பதுபோன்றே ஹஸ்ரத் இத்ரீஸின் கபரும் பூமியில் இருக்கின்றது. சுருக்கம் என்னவெனில், ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களுடைய உயர்த்துதல் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் போன்று பௌதீக உயர்த்துதலாக கருதுவீர்கள் எனில் அவரும் உலகிற்கு திரும்ப வருவது பற்றி காட்ட வேண்டிவரும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அறிவுப்பூர்வமான ஆதாரத்திற்கு எதிரில் எவரும் எந்த சான்றையும் கொண்டு வந்து விட இயலாது என்பதே உண்மை. முஸ்லிம்கள் பற்றி ஆச்சர்யம் என்னவெனில், ஒருபுறம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உம்மத்தில் ஒரு நபி வர முடியும் என்பதை ஏற்க முடியவில்லை. **ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம்** – இவர்களுடன் சேராத பின்னவர்களிலிருந்து ஒரு நபி வருவதைப் பற்றி திருக்குர்ஆன் கூறியிருந்தும் நம்ப முடியவில்லை. இந்த வசனத்தை படிக்கின்றனர். பிறகும் நம்புவதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சொல்லாகிய **இமாமுகும் மின்கும்** – இமாம் உங்களிலிருந்தே தோன்றுவார் என்பதைப் பற்றியும் ஆய்வு செய்வதில்லை. பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது மிகவும் அன்பு செலுத்துவதாக வேறு வாதம் செய்கின்றனர். இவர்கள் தமது அறியாமையால், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் தமது மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற வாதத்தின் மூலம் தன்னைத்தானே நபி என்று கூறி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்துகிறார். (நவூதுபில்லாஹ்) என்று கூறுகின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்திலிருந்தே அன்னாரின் மீது கொண்ட பேரன்பின் காரணத்தால் இறைவன் ஒருவரை நபியாக்கினான்

என்பதே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெருமைக்கு போதிய சான்றாகும். இந்த நுபுவ்வத் என்ற அந்தஸ்து அன்னாருக்கு இறைத் தொடர்பு இருந்ததால் மட்டும் கிடைத்துவிடவில்லை. மற்ற முந்தைய நபிமார்களுக்கு கிடைத்தது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் நுபுவ்வத் கிடைத்துவிடவில்லை. அந்த முந்தைய நபிமார்களுள் சிலர் **ஷரீஅத்துடனும்**, சிலர் **ஷரீஅத்** இல்லாமலும் முந்தைய நபியின் **ஷரீஅத்தைப்** பின்பற்றும் நபியாக வந்தனர். தமது முந்தைய நபியின் **ஷரீஅத்தை** தொடர்ந்தனர். ஆனால் முஹம்மதிய மஸீஹின் அந்தஸ்து, உயர்வு எல்லாம் முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் விளைவால் கிடைத்ததாகும். அன்னாரின் உம்மத்தைச் சார்ந்தவராக இருந்ததால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இந்த பதவி கிடைத்தது. அன்னாரின் மீது கொண்ட பேரன்பு, பிரியத்தால் இந்த நுபுவ்வத் கிடைத்தது. இவை அனைத்தும் இறைவனது வாக்குறுதிக்கு ஏற்ப கிடைத்ததும் ஆகும். ஆகரீன்களில் இருந்து மஸீஹ் மவ்வூது தோன்றுவார் என்று கூறப்பட்டிருந்தது. எனவே முஸ்லிம்கள் ஈஸா (அலை) அவர்களை உயிருடன் வானத்தில் அமர்த்துவதற்குப் பதில் அந்த கிறித்தவக் கொள்கையை விடுத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அடிமையாக அவர்களின் உம்மத்தில் இருந்து வந்த நபியை ஏற்க வேண்டும். அதில்தான் இஸ்லாத்தின் வாழ்வு உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெருமையும் அதில்தான் உயருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஓர் ஆட்சேபனை இவ்வாறு செய்கின்றனர். மிர்ஸா சாஹிப் கூறுகிறார். ஈஸா நபியை மரணிக்க விடுங்கள். அதில்தான் இஸ்லாத்தின் வாழ்வு உள்ளது.

உண்மையில் ஈஸாவுடைய மரணத்தில் இஸ்லாத்தின் வாழ்வு உள்ளது என்று கூறியதில் எந்த தவறும் இல்லை. மாறாக, தமது வாதத்தை உயிருடன் வைப்பதற்காக தவறான பொருளில் பிடிவாதம் பிடித்து அவரே திரும்ப வர வேண்டும் என்கின்றனர். அதுதான் தவறு. அவரோ மரணித்து விட்டார். அல்லாஹ் இவர்களுக்கு சிந்திக்கும் திறனை வழங்குவானாக.

அஹ்மதிகளாகிய நாம், மிக மிக உயரிய ஸ்தானம் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுடையது என்று உறுதியாக நம்புகிறோம். அல்லாஹ்வுடைய மிக உயரிய அன்பிற்குரிய நபி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களேயாவர். அல்லாஹ்வுடைய இயற்கைச் சட்டத்தில் ஒருவர் உயிருடன் பூத உடலுடன் வானிற்கு செல்ல இடமிருந்தால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மட்டும்தான் செல்ல இயலும். வேறு யாரும் செல்ல இயலாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் சம்பவத்தில் நபிமார்களைப் பார்த்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மரணித்துப் போனவர்கள். அவர்களிடையே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களையும் கண்டார்கள். ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களையும் கண்டார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இரண்டாவது வானத்தில் கண்டார்கள். **வ ரஃபஅனாஹு மகானன் அலிய்யா** – மிக மிக மேலான இடத்திற்கு அவரை உயர்த்தினோம் என்ற வசனத்திற்கு ஏற்ப அதற்கு இரண்டு தர்ஜாவுக்கு மேல் ஹஸ்ரத் இத்ரீஸ் (அலை) அவர்களை நான்காவது வானத்தில் கண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே **ஸித்ரத்துல் முன்தஹா** வரை சென்றார்கள். ஏனெனில் அவர்கள் தகுதி இவைகள் அனைவரையும் விட உயர்ந்தது. மேலும் மிஃராஜ் சம்பவத்தில் வருகிறது. ஆறாவது வானத்திற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உயர்த்தப்பட்ட போது அங்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைக் கண்டார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் கூறினார்கள். அந்த அரபி வாசகத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு மொழிபெயர்த்துள்ளார்கள். என் இறைவா என்னை விட ஒருவர் அதிக உயரத்திற்கு உயர்த்தப்படுவார் என்று நான் கருதவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இப்போது பாருங்கள். **ரஃபஅ** என்ற சொல் தகுதியின் உயர்வுக்கு பயன்படுகிறது. சூரா பக்கராவின் 154–வது வசனத்தில் வருகிறது. **வ ரஃபஅனாஹும் தரஜாத்** – இவர்களுள் சிலருக்கு மற்றவரை விட மேன்மையை வழங்கினோம். எனவே இந்த வசனம் மற்றும் ஹதீஸிலிருந்து விளங்குகின்ற பொருள், ஒவ்வொரு நபியும் அவரவர் தகுதிக்கு ஏற்ப வானத்திற்கு உயர்த்தப்படுகிறார். அவர் பெற்ற நெருக்கத்திற்கேற்ப **ரஃபஅ** –வில் பங்கு பெறுகிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்து அவர்கள் அனைவரையும் விட உயர்ந்ததாக இருந்தது என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். அன்னார் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் அந்தஸ்துக்கு மாற்றமான

பொருளைத் தந்து அவர்களின் தகுதியைத் தாழ்த்த மற்ற முஸ்லிம்கள் முயல்கின்றனர். அதே வேளையில் நம்மீது குற்றம்சாட்டப்படுகிறது. நாம் கத்முன் நுபுவ்வத் பற்றி புரியவில்லையாம்! நவூதுபில்லாஹ்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக என்ன கூறுகிறார்கள் என்று பாருங்கள். இந்த தஃப்ஸீர் ஒவ்வோர் அஹ்மதியின் ஈமானின் ஒரு பகுதியாகும். இதிலிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயர்வும் பெருமையும் வெளிப்படுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியா அவர்களுக்கு முன்னரே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் நுபுவ்வத்தைப் பெற்று விட்டார். பிறகு அவரது நுபுவ்வத்தை இழந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பின்பற்றுதலின் கீழ் எப்படி வர முடியும்? அவர் மீண்டும் வந்தாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியே ஆக வேண்டும். அது சாத்தியமில்லை. அல்லாஹ்விடம் அப்படியொரு சட்டம் இல்லை. காத்தமுன்னபிய்யீன் என்ற வசனம் முன்னால் நபி வருவதை நிறுத்துகிறது. ஆனால் அவர்களைப் பின்பற்றி வரக்கூடிய ஒரு நபியினால் காத்தமுன்னபிய்யீன் என்ற வசனத்திற்கு எந்த பங்கமும் ஏற்படுவதில்லை. மாறாக அவர்களைப் பின்பற்றாத ஒரு முந்தைய நபி, நபியாக வருவதினால் காத்தமுன்னபிய்யீன் என்ற தகுதிக்கும் பங்கம் ஏற்படுகிறது. காத்தமுல் அன்பியாகவாக மஸீஹ் ஆகும் போது நிச்சயமாக அவர் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாத முந்தைய நபியாவார்கள். சிறிது காலம் முன்பும் அவர் நபியாக வந்திருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகும் அவரே நபியாக வரப்போகிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இந்நிலையில் அதே ஈஸா நபி திரும்ப வரும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பது பொய்யாகி விடுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வந்து தனது நோக்கத்தை பூர்த்தி செய்து இறந்து விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அதற்கு முன்னரும் வந்தார்கள். அல்லாஹ் அவரை உடலுடன் எடுத்துக் கொண்டான். திரும்பவும் நுபுவ்வத்துடன் அவரையே அனுப்பவும் போகிறான். பிறகு இந்த கொள்கையை ஏற்கும் போது தன்னாலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுன் நபி என்பதை மறுக்கப்பட்டு விடுகிறது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் தெளிவாக உள்ளது. இந்த முன்னறிவிப்பு மஸீஹ் திரும்பவும் உலகிற்கு வருவார் என்பது தவறு என்பதை தெளிவாக உணர முடியும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் கூறுகிறார்கள். எனக்குப் பிறகு எந்த நபியும் வரமாட்டார்கள். திருக்குர்ஆனின் வலாகின் ரஸூலுல்லாஹ் வ காத்தமுன் நபிய்யீன் என்ற வசனமும் இதனை உண்மைப்படுத்துகிறது. நுபுவ்வத் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் முடிந்து விட்டது. பிறகு நபி (ஸல்) அவர்ளுக்குப் பிறகு நபி என்ற சொல்லின் அசல் பொருளுடன் எந்த நபி உலகிற்கு வர முடியும்? அதனால் இஸ்லாமின் வரையறை முற்றிலும் அழிந்து விடும். ஈஸா நபி நுபுவ்வத்தை இழந்து விடுவார் என்பதும் மிக முட்டாள்தனமான கூற்றாகும். இறைவனால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு நபி மீண்டும் கைவிடப்பட்டவராக ஆக முடியுமா? ஒருவர் ஈஸா நபி நபிப்பதவியை இழந்து வருவார் என்று கூறுவது மிகவும் முட்டாள்தனமான கூற்றாகும். ஒருமுறை அவருக்கு நபி என்ற பதவி வழங்கி திருக்குர்ஆனிலும் அதை குறிப்பிட்டுவிட்டு, எல்லா விதமான குற்றச்சாட்டுகளில் இருந்தும் அவரை தூய்மைப்படுத்தி விட்டு, அவர் ரஃபஅ செய்யப்பட்டதாகவும் கூறிவிட்டு, பிறகு உமது தகுதி முடிந்து விட்டது என்று கூறுவது எப்படி சாத்தியமாகும்? சுருக்கமாக எந்த அடிப்படையில் ஈஸா நபி திரும்பவும் உலகிற்கு வர முடியும்? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயரை அல்லாஹ் காத்தமுன் நபிய்யீன் என்று கூறி விட்டு, ஹதீஸில் லா நபிய்ய பஅதி என்று கூறி, எந்த நபியும் நபி என்ற அசல் பொருளின்படி எனக்குப் பிறகு வர முடியாது என்று விளக்கி விட்டார்கள்.

**இதனை மேலும் விளக்குவதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

வரக்கூடிய மஸீஹ் மவ்வூது இதே உம்மத்திலிருந்து வருவார் என்று புகாரி ஹதீஸில் **இமாமுக்கும் மின்கும்** மற்றும் ஸஹீஹ் முஸ்லிமில் **ஃபஅம்மகும் மின்கும்** இரண்டும் தெளிவாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தகுதி என்ன என்பதை அறிவிக்கின்றன. அதாவது வரக்கூடிய அந்த மஸீஹ் மவ்வூது இந்த உம்மத்திலிருந்து தோன்றுவார்.

இங்கு இன்னொரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவதுபோன்று ஹதீஸில் தெளிவாக வருகிறது. மஸீஹ் மவ்வூது இதே உம்மத்திலிருந்து வருவார். இறைவன் அவருக்கு ஒரு உயரிய தகுதியை வழங்குவான். அதனை, தான் நாடுபவருக்கு அவன் வழங்குகிறான். அந்த தகுதியும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால் அவர்களுக்கு கிடைத்தன. அவர்களின் மீது கொண்ட அன்பின் காரணத்தால் கிடைத்தன. அவர்கள் நபி என்றும் அழைக்கப்பட்டார்கள். ரஸூல் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

சில அஹ்மதிகள் கூட சரியாக படிக்கவில்லை. அல்லது சில அஹ்மதிகளுக்கு ஜமாஅத்துடன் முழுமையான ஒட்டுதல் இல்லை. குத்பாக்கள், நிகழ்ச்சிகளை சரியாக கேட்பதில்லை. அல்லது புதிதாக சேர்ந்தவர்கள் தர்பிய்யத் குறைவின் காரணத்தால் அல்லது வேறு ஏதாவது காரணத்தால் உண்மையை வெளிப்படுத்த முடியாதவர்கள் சில வேளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என்று கூறுவதற்கு யோசிக்கின்றனர். மற்றவர்களுக்கு முன்னால் முழுமையாக எடுத்து வைப்பதில்லை.

சில புகார்கள் எனக்கு வருகின்றன. சிலர் சில இடங்களில் இவ்வாறு பேசுகின்றனர். தப்லீக் செய்யும் போதோ சபைகளில் அமர்ந்திருக்கும் போதோ கூறுகின்றனர். வரக்கூடிய மஹ்தி மஸீஹிற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கூற்றின்படி நுபுவ்வத் கிடைக்க வேண்டியிருந்தது. ரஸூல் என்ற பதவியும் கிடைக்க இருந்தது. நபியாக இருப்பதும் ரஸூலாக இருப்பதும் ஒன்றுதான் என்று கூறுகின்றனர்.

**இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தமக்கு வந்த ஓர் இல்ஹாமை எடுத்துக்கூறினார்கள். குல் இன்தும் துஹிப்பூனல்லாஹ ஃபத்தபிஊனி யுஹிப்பிகுமுல்லாஹ் – நீர் கூறுவீராக. நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்கள் எனில் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்.

இந்த இடம் நாம் மிகவும் சிந்திக்க வேண்டிய இடமாகும். இதில் இறைவன் கூறி விட்டான். இறைவன் ஒருவர் மீது அன்பு வைப்பது அவர் முழுமையாக உம்மை பின்பற்றுவதுடன் தொடர்புடையதாகும். உம்முடன் ஓர் அணு அளவும் அவர் எதிர்ப்பு காட்டக் கூடாது. இறைவார்த்தைகளில் அவர்களைக் குறித்து நபி, ரஸூல் இரு சொற்களும் வந்துள்ளன. இவர் நபியும் ரஸூலும் ஆவார். இது உவமையாக பொருள் பொதிந்து கூறப்பட்டதாகும். எவர் இறைவனிடமிருந்து நேரடியாக வஹியைப் பெறுகிறாரோ நிச்சயமாக அவருடன் இறைவன் பேசுகிறான். நபியோடு பேசுவது போன்று அவருடன் பேசுகிறான். அத்தகையவரை நபி என்று கூறுவது தவறன்று. மாறாக அது மிகவும் சரியான உவமையாகும். எனவேதான் ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், இன்ஜீல், தானியேல் மற்றும் மற்ற நபிமார்களின் நூல்களில் எங்கெல்லாம் என்னைப் பற்றி சொல்லப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் என்னைக் குறித்து நபி என்ற சொல் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் நமது ஈமானில் உறுதியை வழங்குவானாக. நாம் எந்த வகை பலவீனமும் காட்டக்கூடாதவர்களாக இருப்போமாக.

எனவே ரஃபஅ என்ற சொல்லின் பொருள் குறித்தும் சில விஷயங்களை எடுத்து வைக்கிறேன்.

ரஃபஅ என்ற சொல் நபிமார்களுக்கு மட்டும் கூறப்பட்டதல்ல. மாறாக, மூஃமின்களுக்கும் ரஃபஅ உண்டு. இது குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எப்போது ஒருவர் இறைவனுடைய காரியங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றாரோ அப்போது இறைவனின் பக்கம் அவருக்கு ரஃபஅ கிடைக்கின்றது. அவர் இவ்வுலகிலேயே இறைவன் பக்கம் எடுத்துக் கொள்ளப்படுகிறார். இறைவனது

சிறப்பான ஒளியால் ஒளியூட்டப்படுகிறார். இந்த ரஃபஅ கிடைத்த பிறகு ஷைத்தானுடைய கை அவர் மீது பட முடியாது. அந்த அளவுக்கு அவர் உயர்ந்து விடுகிறார். ஒவ்வொன்றுக்கும் இவ்வுலகில்கூட அல்லாஹ் ஒரு முன்மாதிரியை வைத்துள்ளான். அதனையே இவ்வாறு கூறப்படுகிறது.

ஷைத்தான் வானத்தின் பக்கம் ஏற முற்படும்போது ஒரு ஒளிப்பிழம்பு அவனை அங்கிருந்து துரத்தி விடுகிறது. ஸாகிய் என்ற அந்த தீப்பிளம்பு மிக உயரத்தில் உள்ளது என்று பொருள்படும். இதில் மனித இயல்பை விளக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதனுக்கு இறைவனிடம் உறுதியான ஈமான் ஏற்படும் போது அவர் இறைவனை நோக்கி உயர்கிறார். அவருக்கு ஒரு சிறப்பான ஆற்றல் ஒளி வழங்கப்படுகிறது. அதன் மூலம் அவர்களை ஷைத்தான் கீழே தள்ளி விடுகிறான். ஸாகிப் கொல்பவருக்கும் கூறப்படும். ஒரு மூஃமின் தனது ஷைத்தானை கொல்ல முயற்சிப்பது அவசியமாகும். அவனை அழிக்க வேண்டும். அவர்கள் ஆன்மீகமோ அறிவியலோ அறியாதவர்கள். அத்தகையோர் இதனைக் கேட்டதும் சிரிக்கின்றனர். உண்மையில் அவர்களே சிரிக்கத்தக்கவர்கள். வெளிப்படையான ஓர் இயற்கை சட்டம் இருப்பது போன்று மறைமுகமாகவும் ஓர் இயற்கைச் சட்டம் உள்ளது. வெளிப்படையான இயற்கைச் சட்டம் மறைமுக இயற்கைச் சட்டத்திற்கு ஓர் அடையாளமாக விளங்குகின்றது. அல்லாஹ் என்னிடம் கூறினான். அன்தமின்னி மிமன்ஸிலத்தி ஸாகிப் – நீ என்னிடம் ஸாகிபின் அந்தஸ்தில் இருக்கிறாய். அதாவது நான் உன்னை ஷைத்தானை கொல்வதற்காக உருவாக்கியுள்ளேன். உன் கையால் ஷைத்தான் அழிவான். ஷைத்தான் உயரத்தில் செல்ல இயலாது. மூஃமின் உயரத்திற்கு செல்லும்போது ஷைத்தானால் அவனை ஜெயிக்க முடியாது. எனவே ஒரு மூஃமின் இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். ஷைத்தானை அழிக்கும் அளவுக்கு ஆற்றல் தனக்கு வேண்டும் என்று கேட்க வேண்டும். எவ்வளவு தீய எண்ணங்கள் தோன்றினாலும் அவற்றை அகற்றுவது ஷைத்தானை அடக்குவதில் அடங்கும். ஒரு மூஃமின் உறுதியுடன் பணியாற்ற வேண்டும். தைரியம் இழக்கக் கூடாது. ஷைத்தானை அழிப்பதில் பின்வாங்கக் கூடாது. இறுதியில் ஒருநாள் அவர் வெற்றியடைவார். இறைவன் ரஹீமும் கரீமும் ஆவான். எவர் இவ்வழியில் முயற்சி செய்வாரோ அவர் இறுதியில் வெற்றியின் முகத்தை காண்பார். ஷைத்தானை அழிப்பதிலேயே மனிதனுக்கு பெரிய அந்தஸ்துகள் கிடைக்கின்றன. அல்லாஹ் நம்மை ரஃபஅ வின் உண்மையான பொருளை புரியும் வாய்ப்பை வழங்குவானாக. ரஃபஅ சம்பந்தமான விவாதங்களில் ஈடுபடாமல் அஃமால்களை சரிசெய்து இறைவனுடன் உள்ள தொடர்பை அதிகரிப்போமாக. அத்தொடர்பு மூலமாகவே நாம் ஷைத்தானை அழிப்பவர்களுடன் இணைய முடியும்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 10.07.2009

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**